DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions : **S.C.No.230/2019**

Depositions of Witness for : Prosecution Pw 1
Defence
Court

Name : திரு.நல்லமலை
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of August 2024.

(A1 to A6, A8 to A10 present. A7 died.)

**முதல் விசாரணை**

நான் தற்போது உசிலம்பட்டியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன ராஜபாண்டி என்ற ஜெகதீஷ் என்ற நபரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. 7-8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் உசிலம்பட்டியில் இருந்து ஆலங்குளத்திற்கு ஒரு நண்பரை பார்க்கவந்தேன். அப்போது வரும் வழியில் ஊத்துமலைக்கு அருகே காரில் வந்த எனக்கு ஒரு சிறு விபத்து ஏற்பட்டது. உடனே நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன்.

போலீசார் வந்து விசாரித்தார்கள். ஏதோ ஒரு கேஸ் என்று சொன்னார்கள். அதில் நான் ஜாமீன் பெற்றேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது கிடையாது. இந்த புகாரை நான் கொடுக்கவில்லை. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, நான் கள்ள நோட்டு வியாபாரம் விஷயமாக எனது ஓட்டுநர் ஜெகதீஷ் என்பவருடன் கடந்த 29.02.2016 ஆம் தேதி எனக்கு சொந்தமான TN–59–AH–8679 பதிவெண் கொண்ட காரில் ராஜபாளையம் புது பஸ் ஸ்டாண்ட் பக்கம் வந்தோம் என்றும், அப்போது பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய 6 நபர்கள் என்னை அவர்களது வண்டிக்குள் இழுத்து உட்கார வைத்து கடத்திவிட்டார்கள் என்றும், அதன் பின்னர் இரவு சுமார் 08.00 மணியளவில் ஊத்துமனை மலையடிவாரம் சென்று என்னையும் எனது டிரைவர் ஜெகதீஷையும் இழுத்துக்கொண்டுபோய் நாங்க 7ள் ஏற்கெனவே கொடுத்த பணத்திற்கு என்னடா பதில் என்று கேட்டு கழுத்தில் அரிவாளை வைத்து மிரட்டினார்கள் என்றும், நான் பணம் தருகிறேன் என்று சொன்னபிறகும், இரவு 11.45 மணியளவில் இவண் பணம் தருவதாக தெரியவில்லை என்று சொல்லி தங்களிடம் இருந்த அரிவாளால் 6 பேரும் என்னையும் என் டிரைவரையும் கைகளில் ஓங்கி வெட்டினார்கள் என்றும், தோள்பட்டையில் வெட்டினார்கள் என்றும், நான் உயிருக்கு பயந்து ஓடி ஒளிந்துகொண்டேன் என்றும், காட்டுப்பகுதியில் மறைந்து யாருக்கும் தெரியாமல் கடந்த 01.03.2016 ஆம் தேதி நடந்தே ஊத்துமலை காவல்நிலையம் சென்று புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை**

**ஒம்/-S.மனோஜ்குமார்**
**கூடுதல் மாவட்ட நீதிபதி**
**தென்காசி**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | | |
| Miscellaneous | | |
| Preliminary Register | | |
| Sessions | : | **S.C.No.230/2019** |
| Depositions of Witness for | : | Prosecution Pw 2 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு.வெங்கடசாமி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of August 2024.

(A1 to A6, A8 to A10 present. A7 died.)

**<u>முதல் விசாரணை</u>**

நான் சிதம்பராபுரத்தில் வசித்து வருகிறேன். நான் செங்கோட்டை வனச்சரகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். சுமார் 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வழக்கம் போல் பணிக்கு சென்றபோது, ஊத்துமலை போலீசார் வந்து மலைப்பகுதியில் ஒரு கொலை நடந்திருப்பதாக என்னிடம் சொன்னார்கள். தேடிப்பார்க்க வேண்டும் என்று என்னை அழைத்தார்கள். நானும் என்னுடன் வேலை பார்க்கும் கருப்பசாமியும் ஊத்துமலை மலைப்பகுதியில் சென்று போலீசாருடன்

தேடிப்பார்த்தோம். 2 நாட்கள் தேடியும் எந்த சடலமும் கிடைக்கவில்லை. 3 வது நாள் போலீசார் தொலைபேசியில் அழைத்து சடலம் கிடைத்துவிட்டதாகவும், என்னை அங்கே வருமாறும் கூறினார்கள். நான் அங்கு சென்று பார்த்தபோது சடலம் இருந்தது. இறந்து போன நபர் யார் என்ன என்ற விவரம் எனக்கு தெரியாது. கொலையாளிகள் யாரென்றும் எனக்கு தெரியாது. சிறிது நேரம் அங்கு காவலுக்கு இருக்குமாறு போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் அங்கு இருந்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, கடந்த 01.03.2016 ஆம் தேதி மாலை 05.00 மணியளவில் ஊத்துமலை காவல்நிலைய ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளின் படி, ஊத்துமலை கீழ்பாகம் மலைப்பகுதிக்கு சென்று மதுரை மாவட்டத்தை சேர்ந்த நல்லமலை என்பவரை கடத்தி அவரது ஓட்டுநர் ஜெகதீஷ் என்பவர் மலைக்குள் சென்றவர் என்ன ஆனார் என்று தெரியவில்லை என ஊத்துமலை காவல்நிலையத்தில் பதிவுசெய்யப்பட்ட வழக்கு சம்பந்தமாக சம்பவஇடத்தை கண்டறிய வேண்டும் என நான் போலீசாருடனும் என்னுடன் பணிபுரியும் கருப்பசாமி என்ற நபரையும் சேர்த்துக்கொண்டு, மலைப்பகுதிக்குள் தேடிப்பார்த்தபோது கடந்த 05.03.2016 ஆம் தேதி மதியம் 12.15 மணியளவில் ஆலங்குளம் மருதப்பப்புரம் இசக்கி தேவர் மகன் தெய்வசுந்தரபாண்டியன் என்பவரை போலீசார் கைது செய்து ஊத்துமலை மலைப்பகுதியில் உள்ள ஆஞ்சநேயர் கோவில் பக்கம் அழைத்து சென்றபோது, அழுகிய நிலையில் உள்ள ஒரு சடலத்தை அவர் அடையாளம் காட்டினார். அந்த சடலம் நல்லமலையின் ஓட்டுநர் ஜெகதீஷ் என கூறினார். நல்லமலை என்பவருக்கும் தெய்வசுந்தர பாண்டியன் என்பவருக்கும் இடையே நடந்த கள்ளநோட்டு வியாபார முன்விரோதத்தில் ஜெகதீஷ் என்பவரை கணபதி தேவரும் சுரண்டையை சேர்ந்த நெல்லப்பரையும் சபரி செல்வம் என்பவரும் அரிவாளால் வெட்டியும் கத்தியால் குத்தியும் கொலை செய்ததை கேட்டு தெரிந்துகொண்டேன் என்று சொல்லிவிட்டு, தற்போது உண்மையை மறைத்து பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.</u>**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

**ஓம்/-S.மனோஜ்குமார்**
**கூடுதல் மாவட்ட நீதிபதி**
**தென்காசி**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | | |
| Miscellaneous | | |
| Preliminary Register | | |
| Sessions | : | **S.C.No.230/2019** |
| Depositions of Witness for | : | Prosecution Pw 3 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு.சரவணன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of August 2024.

(A1 to A6, A8 to A10 present. A7 died.)

<u>முதல் விசாரணை</u>

நான் சுரண்டையில் வசித்து வருகிறேன். டிரைவர் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. சம்பவம் குறித்து நான் எதுவும் கேள்விப்படவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, இவ்வழக்கு சம்பவத்தில் தொடர்பு உள்ளதாக சொல்லி எனக்கு சொந்தமான TN-72-AK-5017 பதிவெண் கொண்ட டவேரா காரை போலீசார் கைப்பற்றினார்கள் என்றும், எனது வாகனத்தில் உசிலம்பட்டியை சேர்ந்த நல்லமலை என்பவரையும் அவரது கார் டிரைவர் ஜெகதீஷ் என்பவரையும் வெள்ளத்துரை, கணேசன், சபரிசெல்வம் ஆகியோர் கடத்திக்கொண்டுபோய் பணம் கேட்டு மிரட்டியதாகவும், நல்லமலையை வெட்டி கொலை செய்ய முயற்சி செய்தார்கள் என்றும் ராஜபாண்டி (எ) ஜெகதீஷை வெட்டி கொலை செய்துவிட்டார்கள் என்றும் தெரிந்துகொண்டேன் என்று சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.</u>**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

**ஒம்/-S.மனோஜ்குமார்**
**கூடுதல் மாவட்ட நீதிபதி**
**தென்காசி**